1983 மார்ச் 8]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீவன உற்பத்திக்கான தீவிர கால் நடை அபிவிருத்தி திட்டம் 9 பகுதிகளில் அதாவது திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருநெல்வேலி, மதுரை, உசிலம்பட்டி, வாடிப்பட்டி, பண்ருட்டி மற்றும் தாம்பரம் ஆகிய பகுதிகளில் செயல்பட்டு வருகின்றது. இதில் உசிலம்பட்டி மற்றும் வாடிப்பட்டி பிரிவு 1979—80-லிருந்து செயல்படத் துவங்கியுள்ளது. மேலும், பண்ருட்டி மற்றும் தாம்பரம் பிரிவுகள் 1981—82-லிருந்து செயல்படத் துவங்கியுள்ளது. கால்நடை தீவன் அபிவிருத்தியில் விஞ்ஞான முறைகளைக் கையாளுவது நமது விவசாயிகளிடையே குறைவாக காணப்படுகிறது. அதை முறையாக உரமிட்டு உரிய வழியில் வளர்ப்பதற்கு ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காக விவசாயிகளுக்கு ஆகும் செலவில் ஒரு பகுதி மானியமாக வழங்கப்படுகிறது. மானியம் வழங்கும் பொழுது ஒரு நபருக்கு ஏதாவது ஒரு திட்டத்தின்கீழ் மட்டும் மானியம் வழங்கப்படுகிறது. இதனால் பரவலாக பெருமளவு விவசாயிகள் பலனடைகின்றனர். பாசன வசதியுடன் ரோடுக்குப் பக்கத்தில் அமைந்திருக்கும் விவசாயிகளுக்கு முதலிடமாக மானியம் வழங்கப்படுகிறது. தீவன பயிர் உற்பத்தி செய்யும் விவசாயி மானியம் பெற, உழவு மாடுகள் அல்லது கறவை மாடுகள் கண்டிப்பாக வைத்திருப்பவராக இருத்தல் வேண்டும்.

ஊன்முற்றோர்கள் வேலை வாய்ப்பிற்கான பயிற்சி பெற்றிடும்போது வழங்கப்படும் உதவித் தொகை.

*வினா எண். 324—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் ஊனமுற்றோருக்கு தனியார் துறையில் வேலை வாய்ப்புக்குப் பயிற்சி கொடுக்கும் போது, அரசாங்கம் உதவித் தொகை கொடுக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயலுக்கு வரும் ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) மற்றும் (ஆ) தமிழ் நாட்டில் ஊனமுற்றோர்கள் தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்களில் வேலை வாய்ப்பிற்கான பயிற்சி பெற்றிடும் போது அவர்களுக்கு உதவித் தொகை வழங்கிடும் திட்டம் 1979—80 முதற் கொண்டே செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவர்களுக்கு மாதம் ரூ. 150 உதவிப் பணமாக ஓராண்டு காலத்திற்கு வழங்கப்படுகிறது.

[1983 மார்ச் 8

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் துறையிலே வேலை வாய்ப்புக்குப் பயிற்சி கொடுக்கும் போது அதற்காக அரசாங்கம் இதுவரை எவ்வளவு உதவித் தொகை கொடுத்திருக்கிறது? எத்தனை பேர்களுக்குக் கொடுத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, 1979–80 ஆம் ஆண்டு 30 நபர்கள் தொழில் பழகுவதற்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அதற்காக 16,500 ரூபாய் தமிழக அரசின் மூலமாக அந்த நிறுவனங்களுக்குப் பணம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. 1980–81 ஆம் ஆண்டில் 245 பேர்கள் தொழில் பழகுவதற்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள், அதற்காக 2 இலட்ச ரூபாய் அரசு பணம் வழங்கியிருக்கிறது. 1981–82 ஆம் ஆண்டில் 362 பேர்கள் தொழில் பழகுவதற்காக அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அதற்காக 3 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் தமிழக அரசு வழங்கி உள்ளது.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் முக்கியமாக தொழு நோய் பிடித்தவர்களுக்கு தனியார் நிறுவனங்களிலே வேலை கொடுக்கிற முறையிலே தனியார் துறையில் இருக்கின்ற லெப்ரஸி ஹாஸ்பிடல் போன்றவற்றில் அப்படிப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கும் திட்டத்தை வைத்து இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இந்த அரசும் முன்னுரிமை அதிகமாகக் கொடுக்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, தொழு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தொழு நோய் இல்லம் என்று அமைத்துக் கொடுத்து அதன் மூலமாக அவர்கள் பிற்காலத்திலே சுயமாக வாழ வேண்டுமென்ற எண்ணத்திலே பாய் பின்னுதல், தையல் தொழில் செய்தல் இப்படி எந்தத் தொழிலிலே அவர்களுக்கு பிடித்தம் இருக்கிறதோ அந்தத் தொழிலிலே பயிற்சி கொடுத்து உதவித் தொகையும் கொடுத்து பிற்காலத்திலே அவர்களை வாழச் செய்வதற்கு ஏற்பாடுகளை அரசு செய்து வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, ஊனமுற்றோர்களுக்கு தனியார் துறையில் வேலைவாய்ப்பிலே முன்னுரிமை கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, ஊனமுற்றோர்களுக்கு 1980–81 ஆம் ஆண்டில் உலக ஊனமுற்றோர் ஆண்டாக அதை நாம் கொண்டாடியபோது ஊனமுற்றோர்களுக்கு கண்டிப்பாக தனியார் துறையாக இருந்தாலும் சரி, அரசுத் துறையாக இருந்தாலும் சரி அவர்களுக்கு

1983 மார்ச் 8]

முன்னுரிமை கொடுக்கவேண்டுமென்று அரசு மூலமாகவும் நானும் எழுதியிருக்கிறேன், பல இடங்களிலே கூட்டங்களில் பேசுகின்றபோது நான் தெரிவித்திருக்கிறேன், தனியார் நிறுவனங்களிலே ஊனமுற்றோர்களுக்கு கண்டிப்பாக வேலைவாய்ப்பில் முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறேன். அது மட்டுமல்லாமல் தொழில் பழகுவதற்காக நாம் ஊனமுற்றவர்களை அனுப்புகிறபோது குறிப்பாக தனியார் நிறுவனங்களுக்கு அனுப்புகிறபோது எவ்வளவு பேர்களை நாம் அனுப்புகிறோமோ அவ்வளவு பேர்களுக்கும் தக்க பணத்தை நாம் கொடுத்து வருகிறோம். அப்படி நாம் அவர்களை அனுப்புகிறபோது ஒரு ஒப்பந்தத்தின் மூலமாக ஒரு ஆண்டு அவர்கள் தொழில் பழகியதற்குப் பிறகு அங்கே பெர்மனன்ட்டாக வேலைவாய்ப்பு பெறக்கூடிய ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்ற ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டுதான் அனுப்புகிறோம். அரசு நிறுவனங்களிலே அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுத்துக் கொண்டு வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) பத்திரிகையாளர் குறித்து பேரவையில் நிறைவேற்றப்பட்ட சட்டம்.

திரு. என். சங்கரய்யா: பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு ஒரு மிக முக்கியமான பிரச்சினையை நான் கொண்டுவர விரும்புகிறேன். பத்திரிகையாளர்களுடைய உரிமைகளைப் பாதிக்கக்கூடிய ஒரு சட்டத்தை இங்கே நாம் நிறைவேற்றினோம். அதற்கு எதிர்க்கட்சிகளும் பத்திரிகைகளும் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தன. அப்போது மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தலைமையில் ஒரு குழுவைப் போட்டு இதை மறுபரிசீலனை செய்வதாக ஒரு அறிவிப்பு பத்திரிகைகளிலே வெளிவந்தது. ஆனால் இதற்கு இடையில்—இதேபோன்று ஒரு சட்டத்தை நிறைவேற்றுகின்ற பீகார் மாநிலத்தினுடைய முதலமைச்சர் கடுமையான எதிர்ப்புக்குப் பிறகு, அனுபவத்திற்குப் பிறகு—அந்தச் சட்டம் செத்துவிட்டது என்று அவர் ஏற்கனவே அறிவித்து இருக்கிறார், இப்போது நான் கேட்க